# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 07.05.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# கல்முனை விவகாரம் எம் இனத்தின் விவகாரம்



## கருணா அம்மான் கூறுகிறார்

(சசி)

கல்முனை வடக்குப்பிரச்சினை அம்பாறை மக்களது வாக்கு பிரச்சினை அல்ல இது எமது இனத்தை காப்பதற்கான ஒரு பிரச்சனையாக தான் நான் பார்க்கின்றேன் இதற்கு பிள்ளையார் சுழி போட்டவன் நான் இந்த விடயத்தில் எங்களுடன் அனைவரும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்று இவ்விடத்தில் நான் அழைப்பு விடுக்கின்றேன்

02 ஆம் பக்கத்தில்...

## "கல்முனை விவகாரத்தில் ஒன்றிணையுங்கள்"

### முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அம்பாறை அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம் அழைப்பு



(ஏ.எல்.எம்.ஷினாஸ் , நூருல் ஹுதா உமர்)

கல்முனை விவகாரத்தில் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் உறுப்பினர்கள் தனிப்பட்ட கருத்து வேற்றுமைகளை மறந்து ஒரு குழுவாக இணைந்து செயல்பட முன்வர வேண்டும் என்று அம்பாறை

07 ஆம் பக்கத்தில்...



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மருத்துவ ஆய்வுகூடத்துக்கு பீ.சி.ஆர் பரிசோதனைகளை பரிசோதிப்பதற்கான உபகரணங்களை மட்டக்களப்பு அருவி பெண்கள் அமைப்பினரும், மட்டக்களப்பு மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந் தனது சொந்த நிதியிலும் ஒரு தொகை உபகரணங்களை மட்டு அரசாங்க அதிபர் கருணாகரன் முன்னிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப்பணிப்பாளர் கே.கலாரஞ்சினி,நுண்ணுரியல் வைத்திய நிபுணர்பி.தேவகாந்தன் ஆகியோரிடம் ஒப்படைப்பதை படத்தில் காணலாம்.

## சாணாக்கியனின் உரையில் பிரிவினை இல்லை

### இம்ரான் மஹ்ரூப் தெரிவிப்பு



(பைஷல் இஸ்மாயில் )

கடந்த 04 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஆற்றிய உரையில் தமிழ் முஸ்லிம் இன நல்லுறவை பாதிக்கும் அல்லது இரு இனங்களுக்கிடையில் பாரிய பிரிவினைவாதத்தை தோற்றுவிக்கும் எந்த அம்சங்களும் இருப்பதாக எனக்கு தோன்றவில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...






## கந்தளாயில் சடுதியாக அதிகரிக்கும் கோரோனா வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டது



(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சடுதியாக கொரோனா வைரஸ் தொற்றாளர்கள்

02 ஆம் பக்கத்தில்...

## மண்முனை தேன் எருவில் பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் 20 பேருக்கு கோரோனா தோற்று

(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட கொரோனா தொற்று பரிசோதனையில் 20 பேருக்கு தொற்று உறுதி

02 ஆம் பக்கத்தில்...






## மட்டக்களப்பில் கோவிட் 19 கட்டுப்படுத்த முழுமையான பங்களிப்பை வழங்குவோம்:மாநகர முதல்வர் அறிவிப்பு



(அலுவலக நிருபர்)

கடந்த சில நாட்களாக மட்டக்களப்பில் கொரோனாவின் மூன்றாவது அலையின் தாக்கம் அதிகரித்துவரும் நிலையில், அதனைக்

07 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில் 24 மணிநேரத்தில் 2 மரணங்கள்:21 பேருக்கு தோற்று

(அலுவலக நிருபர்)

மட்டக்களப்பு பிராந்தியத்தில் கடந்த 24 மணித்தியாலத்தில் இரண்டு மரணங்கள் சம்பவித்துள்ளதுடன், 21 கொவிட் நோயாளர்களும் அடையாளம்

02 ஆம் பக்கத்தில்...

## குருமண்வெளியில் கோரோனா தோற்றால் ஒருவர் உயிரிழப்பு

(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட குருமண்வெளி - 12 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பாலர் பாடசாலை வீதியில் வசித்து வந்த 61 வயதான

07 ஆம் பக்கத்தில்...

## திருமலையில் இரு குழுக்களுக்கிடையில் மோதல்: ஒருவர் பலி: 4 பேர் படுகாயம்:

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை சீனக்குடா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கப்பல் துறை பகுதியில் இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் நான்கு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இளைஞரொருவர்

02 ஆம் பக்கத்தில்...











## மட்டு. - கோழும்பு பிரதான வீதி விபத்தில் இருவர் மரணம்



(ந.குகதர்சன்)

02 ஆம் பக்கத்தில்...

# திருமலையில் இரு குழுக்களுக்கிடையில் மோதல்; ஒருவர் பலி; 4 பேர் படுகாயம்

உயிரிழந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 1.00மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் கிண்ணியாகாக் காமுனை பகுதியைச் சேர்ந்த எம்.முஜாஹித் (20வயது) எனவும் பொலிசார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் தற்பொழுது கிண்ணியா வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளதுடன் விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை நான்கு பேர் காயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் கிண்ணியா ரஹ்மானியா வீதியைச் சேர்ந்த 18 வயது 20 வயது 29 வயது மற்றும் 60 வயது உடையவர்கள் காயமடைந்துள்ளதாகவும், இதில் இராணுவ சிப்பாய் ஒருவர் அடங்குவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதே வேளை அனுமதிக்கப்பட்ட நான்கு பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அண்டிஜன் பரிசோதனையின் மூலம் கிண்ணியாநடுவூற்று பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

அத்துடன் உயிரிழந்தவரின் சடலம் கிண்ணியா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் மரணம் தொடர்பிலான விசாரணைகளை சீனக்குடா பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மண்முனை தென் எருவில் பற்று பிரதேச

செய்யப்பட்டுள்ளதாக சுகாதார துறையினர் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் 60 பேருக்கு கடந்த 4 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கொரோனா தொற்று பரிசோதனையில் அவர்களில் 12 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. தொடர்ந்து 05 ஆம் திகதி அதேபிரதேச செயலகத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் 199 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட கொரோனா தொற்று பரிசோதனையில் 06 பேருக்கு தொற்று உறுதிப்பட்டிருந்தது.

06 ஆம் திகதி உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் அடங்கலாக 60 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் 02 பேருக்கும் அவர்களது உறவினர்கள் 04 பேருக்கும் கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க தமது பிரதேச செலயக உத்தியோகஸ்த்தர்களுக்கு ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக கடந்த 05 ஆம் திகதி முதல் தமது பிரதேச பொதுமக்களுக்கான அரச சேவைகளை தற்காலிகமாக மறு அறிவித்தல்வரை வழங்க முடியாமலுள்ளது என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

எனவே மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகம் கொரோனா தொற்று காரணமாக கடந்த 5 ஆம் திகதி முதல் அரச சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.












# மட்டக்களப்பில் 24 மணிநேரத்தில் 2 மரணங்கள்; 21 பேருக்கு

காணப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இவ்வாறாக இனங்காணப்பட்டுள்ள 21 பேரில் 08 பேர் மட்டக்களப்பு வைத்திய அதிகாரி பிரிவிலும், வெல்லாவெளி, செங்கலடி மற்றும் ஒட்டமாவடி பிரிவுகளில் தலா 03 பேர் வீதமும், காத்தான்குடியில் ஒருவருமாக, கோறளைப்பற்று மத்தியில் ஒருவரும், களுவாஞ்சிகுடியில் 02 பேருமாக அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

அதே வேளை கடந்த 24 மணித்தியாலங்களில் மரணித்துள்ள இருவரும் மட்டக்களப்பு வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்களென்பதுடன், இருவரும் 69 வயதையுடைய ஆண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1209 பேர் கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில், 13 மரணங்கள் சம்பவித்துள்ளதுடன் 210 பேர் தொடர்ந்தும் சிகிட்சை பெற்றுவருகின்றனர். இவர்களின் 988 பேர் குணமடைந்து வீடு சென்றுள்ளனர்.

கொவிட் மூன்றாவது அலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 நாட்களில் 226 கொரனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில் ஒரு வாரத்தில் 135 பேர் இனங்காணப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த 16 நாட்களில் 3 மரணங்கள் சம்பவித்துள்ளதுடன் தேசிய ரீதியில் இறப்பு வீதமானது ஒரு வீதத்திற்கும் குறைவாக காணப்படுகின்ற போதிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் மரண வீதமானது ஒரு வீதத்திற்கும் அதிகமாக காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

பொது மக்கள் கொவிட் மூன்றாவது அலையின் பாரிய ஆபத்தை அறிந்து சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறும், குறிப்பாக நோன்பு காலங்களில் ஒன்று கூடல்களை முற்றாக தவிர்த்துக்கொள்ளுமாறும், முகக்கவசத்தை அணிந்து கொள்ளாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக 1000 கட்டில்கள் எமது மட்டக்களப்பு மாவட்டத்தில் தயார்படுத்தப்பட வேண்டியுள்ள நிலையில் 400 நோயாளர்களை பராமரிக்ககூடிய வகையிலேயே உள்ளதாகவும், அதற்கு அமைவாக எமது பிராந்தியத்தில் இரண்டு பிரதேச வைத்தியசாலைகள் கொவிட் நோயாளர்களுக்காக தயார்படுத்தப்படவுள்ளதுடன், மற்றும் இரண்டு ஆதார வைத்தியசாலைகளின் சிறு பிரிவுகளை கொவிட் 19 தொற்று நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த ஒரு மாத காலத்திற்குள் %00 கட்டில்களை எமது பிராந்தியத்தில் அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

# மட்டு. - கொழும்பு பிரதான வீதி விபத்தில் இருவர் மரணம்

மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியில் மியான்குளம் சந்தியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கார் மியான்குளம் சந்தியில் அதிவேகமாக பயணித்ததில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாக ஆரம்ப கட்ட விசாரணைகளின் இருந்து தெரிய வந்துள்ளது. இதில் மட்டக்களப்பு ஞானசூரியம் சதுக்க வீதியில் வசிக்கும் பரமேஸ்வரன் தனுஜன் (வயது 31), தெகிவளை ஹோட் வீதியில் வசிக்கும் துரைசிங்கம் வினோகா ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்த இருவரின் உடல்களும் பிரேதப் பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளதுடன், இவ்விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன மேலும் தெரிவித்தார்.

# கந்தளாயில் சடுதியாக அதிகரிக்கும் கொரோனா வர்த்தக

அதிகரித்துள்ளதன் காரணமாக கந்தளாய் நகரல் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் நேற்று 7 ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் 16 ஆம் திகதி வரை மூடப்படுவதாக கந்தளாய் பிரதேச சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கந்தளாய் பிரதேச சபையும், கந்தளாய் வர்த்தக சம்மேளனமும் இணைந்து இந்நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கந்தளாய் பிரதேச சபையின் தவிசாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

கந்தளாய் பிரதேசத்தில் இது வரை 57 தொற்றாளர்கள் இனம் காணப்பட்டு இதில் சிலர் குணமடைந்துள்ளதாகவும், அத்தோடு கந்தளாய் பிரதேசத்தில் இருநூறு குடும்பங்களைச் சேர்ந்த அருநூறு பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கந்தளாய் பொதுச் சுகாதார சிரேஷ்ட பரிசோதகர் ஏ.டபிள்யு சமன் தெரிவித்தார்.

இதனைக் கருத்திற்கொண்டே பத்து நாட்களுக்கு கந்தளாய் நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கந்தளாய் நகரின் அமைந்துள்ள அத்தியவசிய தேவையுடைய வர்த்தக நிலையங்கள் மட்டும் திறக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கந்தளாய் நகரம் வெறிச்சோடிக் காணப்படுவதோடு தேவைக்கு செல்லுவோரை மட்டுமே வீதியில் காணக்கூடியதாகவுள்ளது. நகரில் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

வீணான ஒன்று கூடல்களை தவிர்த்துக் கொள்ளுமாறும், அத்தியவசிய தேவைக்கு செல்ல ஒருவர் மட்டும் செல்லுமாறும் கட்டாயம் முகக்கவசங்களை அணிந்து கொள்ளுமாறும் சம இடைவெளிகளை பேணி சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறும் கந்தளாய் பிரதேச சபையினால் பொது மக்களை தெளிவுபடுத்தி வருவதும் விசேட அம்சமாகும்.

# சாணாக்கியனின் உரையில் பிரிவினை இல்லை

தமிழ் முஸ்லிம் மக்களின் இன நல்லுறவை பேணி வந்த இந்தக் காலகட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் பாராளுமன்ற உரை இரு இனங்களுக்கிடையில் பாரிய பிரிவினவாதத்தை தோற்றுவித்துள்ளது. இதன் தாக்கம் எதிர்காலத்தில் எவ்வாறான பிரச்சினைகளை தோற்றுவிக்கும்? என அவரிடம் வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மாறாக சமூக வலைத்தளங்களில் அதிகமான முஸ்லிம் செயற்பாட்டாளர்கள் அவரது உரையை பாராட்டி பகிர்ந்ததையே காணமுடிந்தது. அவர் தமிழ் சமுகத்தின் குரலாக ஒலிப்பதே தேவையாக இருந்த நிலையில் தனது பன்முக ஆளுமையால் அதற்கும் மேலாக மொத்த சிறுபான்மைக்குமான குரலாக தன்னை பதிவுசெய்துள்ளார். தமிழர் என்ற காரணத்தால் அவர் முஸ்லிம் சமூகத்தின் விலைபோன பிரதிநிதிகளை விமர்சித்தமை இரு இனங்களுக்கிடையில் பாரிய பிரிவினவாதத்தை கொண்டுவரும் என்பது ஏற்புடையதல்ல.

அவர் அரசாங்கத்தின் இனவாத முகத்தை தோலுரித்தார். முஸ்லிம் சமூகத்தின் பாரிய பிரச்சினைகளாக அண்மைய நாட்களில் அடையாளம் காட்டப்பட்ட ஜனாஸா எரிப்பு, புர்கா, மத்ரஸா உள்ளிட்ட பல பிரச்சினைகளில் மௌனம் காத்த 20 ஆம் திருத்தத்துக்கு விலைபோனவர்களை விமர்சிப்பதால் இன நல்லுறவு பாதிக்கப்படாது.

உண்மையில் இன்று குறிப்பாக கிழக்கில் முஸ்லிம் மக்கள் இந்த அரச சலுகைகளுக்கு விலைபோய் நேற்று இருபதுக்கும் நாளை துறைமுக நகர் சட்டத்துக்கும் அரசுக்கு சார்பான கைதூக்கிகள் குறித்து மிகத்தெளிவாகவே உள்ளனர். எதிர்காலத்தில் அரசியல் வங்குரோத்து நிலையை அடைபவர்கள் இரு இனங்களையும் பிழையாக உணர்வூட்டி தாமறிந்த இனவாத அரசியலை மேற்கொள்ள தலைப்படுவார்கள்.

இந்த இடத்தில் நாம் ஒன்றை விளங்க வேண்டும். தமிழ் மக்களதும் முஸ்லிம்களதும் அரசியல் அபிலாஷைகளில் பரஸ்பரம் ஒற்றுமை கொண்ட அம்சங்கள் இருப்பதுபோல முரண்பாடானவைகளும் உள்ளன. அந்த இடங்களில் அந்தந்த சமூகங்களை பிரதிநிதித்துவம் செய்வோர் முரண்பாடான அம்சங்களில் தம் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதே தர்மம் எனலாம். நாம் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு அநீதிக்கெதிராக குரல்கொடுக்கும் சாணக்கியன் போன்றவர்களது நியாயமான, அரச அநீதிக்கெதிரான குரல்களை ஆதரித்து விலைபோகாத சிறுபான்மை உரிமை அரசியலை பலப்படுத்த வேண்டும் என்பதே எனது கருத்தும் எதிர்பார்ப்பும் ஆகும் என்றார்.

# கல்முனை விவகாரம் எம் இனத்தின் விவகாரம்

என விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) தெரிவித்துள்ளர்

நேற்று வெள்ளிக்கிழமை நடந்த ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்

மேலும் தெரிவிக்கையில்;

ஜனாதிபதி தேர்தலில் இது ஜனாதிபதியின் வாயால் அளிக்கப்பட்ட ஒரு வாக்குறுதி பிரதம மந்திரி அவர்களின் வாயால் அளிக்கப்பட்ட வாக்குறுதி என்பது யாவரும் அறிந்த உண்மை .

ஆகவே வாக்குறுதி அளித்துவிட்டு அரசு ஏமாற்றும் என்பதை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் நானும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் இந்த விடயத்தில் அனைவரும் ஒத்துழைத்து நிற்கவேண்டும்

சென்ற அரசாங்கத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆட்சியை மாற்றுகின்ற அல்லது ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக இருந்தவர்கள் இருந்தாலும் கல்முனை விடயத்தை அவர்களால் ஒன்றும் செய்ய முடியாமல் போயிருந்தது.

கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தினை சிறந்த முறையில் முன்னெடுத்து பிரதமர் மற்றும் துறைசார்ந்த அமைச்சர்களின் கவனத்தில் கொண்டு போவதில் நான் மிகவும் பாடுபட்டவர். இது உண்மையில் அம்பாறை மாவட்ட மக்களுக்கு எங்களால் அளிக்கப்பட்ட வாக்குறுதி கூட இதற்கான முன் முடிவுகளை நிறைவேற்றுகின்ற கட்டத்திற்குள் அரசாங்கம் தற்போது வந்துள்ளது இதை அறிந்து கொண்டு பல அரசியல்வாதிகள் இதை அரசியலாக்கி அம்பாறை மாவட்ட மக்களின் வாக்குகளை கவர்வதற்கான விடையமாக தான் வடக்கு பிரதேச செயலகத்தை பயன்படுத்துகின்றனர். உண்மையில் இது அம்பாறை மக்களது வாக்கு பிரச்சினை அல்ல இது எமது இனத்தை காப்பதற்கான ஒரு பிரச்சனையாக தான் நான் பார்க்கின்றேன் இதற்கு பிள்ளையார் சுழி போட்டவன் நான் இந்த விடயத்தில் எங்களுடன் அனைவரும் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்று இவ்விடத்தில் நான் அழைப்பு விடுக்கின்றேன் .

பாராளுமன்றத்தில் இருக்கின்ற தமிழ் பிரதிநிதித்துவங்கள் அனைவருக்கும் உரிமை இருக்கின்றது இதைப் பற்றி கதைப்பதற்கு இதை உரிய முறையில் நாகரீகமான முறையில் முன்னெடுக்க வேண்டும் என்பதுதான் எனது வேண்டுகோள் இதற்காக அவர்கள் ஒத்துழைப்பார்கள் என்றால் அதை நாங்கள் வரவேற்கின்றோம்.

அதை விடுத்து இதை நான்தான் செய்கின்றேன் நான்தான் செய்கின்றேன் என்று இந்த விடயத்தை ஒரு கேலிக்கூத்து ஆக்காமல் அனைவரும் ஒன்று திரண்டு நிற்க வேண்டும். தற்போது இதுதொடர்பாக பேசுவதும் பேச்சுவார்த்தை நடத்துவதும் ஒரு விதண்டாவாதம்இந்த விடயங்களை ஒரு அரசியலாகத்தான் நாங்கள் பார்க்கின்றோம் ஆகவே அனைத்து மக்களும் இதை புரிந்து கொள்ள வேண்டும்.

அம்பாரை மக்களுக்கு நான் வாக்குறுதி அளிக்கிறேன் நான் ஜனாதிபதியோ பிரதமரோ சந்திக்கின்ற வேளைகளில் இந்த விடயம் தொடர்பாக தான் மிக முக்கிய கவனம் எடு க்கின்றேன் என்பதை தெரியப்படுத்துகிறேன்.

இதற்கான பத்திரங்களை கூட அமைச்சர் சமல் ராஜபக்ஷ அவர்கள் தற்போது தயார்படுத்தி உள்ளார் அதற்கான விவரங்கள் அவரிடம் இருக்கின்றது நாங்களும் தகவல்களை வழங்கியுள்ளோம் ஆகவே இதை நாங்கள் கவனமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

கல்முனை பிரதேச செயலகத்தில் இருக்கின்ற அதிகாரிகள் தங்களது வரையறைகளுக்குள் இருக்க வேண்டும் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் அவர்களும் ஒரு அரசியல் வாதிகள் போன்று செயற்பட்டு இதை பாரிய பிரச்சினையாக உருவாக்கி உள்ளார்கள் .

எனவே இவ்விடத்தில் அனைவரும் பொறுமையாக இருந்து செயல்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு என்றார்.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே, அவதானமாகச் செயற்படுங்கள். உங்கள் கடனுக்கான வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்க கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும் ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன் 0.62% தொடக்கம்
10% இல் சொந்த வீடு கட்ட அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள், விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப் பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக நகைத் தொழிலில் அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல் பெயர் பெண்டன், மற்றும் அனைத்து நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன் செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen


Aaran Ayurveda
& Wellness Massage
Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

# ஓட்டமாவடியில் ஒலிபெருக்கி மூலம் கொரோனா விழிப்புணர்வு தெளிவுபடுத்தல்



(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா தொற்று அதிகரித்து காணப்படும் நிலையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மக்களை பாதுகாக்கும் வகையில் பல்வேறு வேலைத் திட்டங்கள் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் வேகமாக பரவி வரும் கொரோனா நோயினை கட்டுப்படுத்தும் நோக்கில் பிரதேச மக்களை விழிப்புணர்வூட்டும் வகையில் ஒலிபெருக்கி மூலம் தகவல்கள் இன்று வழங்கி வைக்கப்பட்டு வருகின்றது.

இதன்போது தேவையற்ற விதத்தில் பொருள் கொள்வனவிற்காக கடை தெருக்களுக்கு செல்வதை தவிர்த்தல், வீட்டை விட்டு வெளியே வரும் போது கட்டாயம் உரிய முறைப்படி முகக்கவசம் அணிந்து கொண்டு செல்லல், அடிக்கடி முறையாக 30 செக்கன்கள் கைகளை கழுவிக் கொள்ளுதல் அல்லது தொற்றுநீக்கி பாவித்தல்.

புனித நோன்பு பெருநாள் வருவதனால் பொருட்களுக்காக வெளியிடங்களுக்கு செல்வதை முற்றாகத் தவிர்த்தல். வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தங்களது வசதிக்கேற்ப நுகர்வோரை உரிய கொவிட் 19 பாதுகாப்புடன் உள்ளெடுத்து தங்களது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சகல பொது நிகழ்வுகள், இப்தார் நிகழ்வுகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நடவடிக்கைகளை மீறுவோருக்கு எதிராக கொவிட்19 சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்வதுடன், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தலில் வழங்கப்பட்டுள்ளது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மக்களை பாதுகாக்கும் வகையில் பிரதேச செயலகம், பிரதேச சபை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், வாழைச்சேனை பொலிஸார் ஆகிய நிறுவனங்கள் இணைந்து செயற்படுகின்றது.

# ரிசாட் பதியுதீனின் கைதுக்கு எதிராக கிண்ணியா பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றம்



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் அவர்கள் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து கிண்ணியா பிரதேச சபையின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் ஏ.ஆர்.எம்.அஸ்மி அவர்களால் முன்வைக்கப்பட்ட பிரேரனை சபையில் ஏகமனதாக ஏற்று கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

கிண்ணியா பிரதேச சபையின் மே மாதத்திற்கான 41 ஆவது மாதாந்த சபை அமர்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கிண்ணியா பிரதேச சபையின் தவிசாளர் கே.எம்.நிஹார் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் ஏ.ஆர்.எம்.அஸ்மி பிரேரணையை முன்வைத்து உரையாற்றுகையில்-

2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி அதிகாலை 3 மணிக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீன் அவர்களது கைதானது இந்த நாட்டு முஸ்லிம்களை வேதனை படுத்துகின்ற ஜனநாயக முறையில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு கைதாக காணப்படுகின்றது.

மேலும் இந்த ஜனநாயக நாட்டில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை கைது செய்வதாக இருந்தால் சபாநாயகருக்கு தெரியப்படுத்தி சபாநாயகர் நீதிமன்றத்திற்கு அறிவித்த பின்னரே கைது செய்யப்பட வேண்டும். மாறாக இதற்கு மாற்றமாக இந்த கைது இடம் பெற்று இருக்கின்றது.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒருமுறை கைது செய்து ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியம் அளித்து எவ்வித குற்றமும் அற்றவர் என விடுதலை செய்யப்பட்டவர் எமது கட்சியின் தலைவர்

அவரை மீண்டும் இந்த குண்டு தாக்குதலுடன் தொடர்பு படுத்தி இடம் பெற்ற இந்த கைது ஒரு சிலரை திருப்திப்படுத்துவதற்கான கைதாகவே காணப்படுகின்றது.

எனவே இந்த நாட்டின் ஒட்டு மொத்த முஸ்லிம்களின் உணர்வுகளை மதித்து எவ்வித குற்றமும் செய்யாத எமது கட்சியின் தலைவர் கௌரவ றிசாட் பதியுதீன் அவர்களை விடுதலை செய்வதற்கான அனைத்து ஜனநாயக முறைகளையும் இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

# பேலியகொடையில் குடும்பஸ்தரை காணவில்லை



கொழும்பு கொச்சிக்கடையைச் சேர்ந்த சாரதி ஒருவர் பேலியகொடையில் காணவில்லை என்று அவருடைய தாயார் பேலியகொடை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

எலகந்தையில் உள்ள மொத்த வியாபார நிலையத்தின் சாரதியான எஸ்.இளங்கோவன் (ஆனந்தன்) என்ற சாரதியே காணாமல் போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை 03ஆம் திகதி முதல் அவர் காணாமல் போயுள்ளதாகவும் அவரைக் கண்டால் 0763334790, 0776682221 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறும் தாயார் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கொரோனா தடுப்பு மருந்து விசுறும் கருவி கையளிப்பு

(பொன்ஆனந்தம்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வேள்விசன் அமைப்பு கொரோனா தடுப்பு மருந்துகளை விசுறத்தக்க கருவி இரண்டை கையளித்துள்ளது.

இதனை பொது இடங்களில் விசுற பாவிக்கும் வகையில் கையளிக்கப்பட்டன. மேலதிக மாவட்ட செயலாளர் ஜே. அருள்ராஜ் அவர்களிடம் இவை கையழிக்கப்பட்ட வேளை கொரோனா தொற்று நீக்கி மற்றும் முக கவசம் உள்ளிட்ட பொருட்களும் கையழிக்கப்பட்டன.

திருகோணமலையில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கொரோனா தொற்றக்கட்டுப்படுத்தும் வகையில் இவை வழங்கப்பட்டதக அறிவிக்கப் பட்டுள்ளன.

இதேவேளை வியாழக்கிழமை காலை 10 மணியில் இருந்து வெள்ளி காலை 10 மணிவரையான 24மணிநேரத்தில் திருகோணமலை பொதுச்சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் 17 கொரோனா தொற்றாளர்கள் இனம்காணப்பட்டு ள்ளதாக பிராந்தி வைத்திய அதிகாரி அலுவலக புள்ளி



விபரஅறிக்கையில் குறிப்படபட்டுள்ளது. இக்காலப்பகுதியில் இருவர் இறந்திருப்பதாகவும் அப்புள்ளிவிபரத்தில் குறிப்படப்பட்டுள்ளது.

# கந்தளாயில் இரண்டு பௌசர்கள் நேருக்கு நேர் மோதல் இருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதி

(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 87 ஆம் கட்டை சந்திப் பகுதியில் இரண்டு பௌசர்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இருவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று 2 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலையிலிருந்து கொழும்புக்குச் எரிபொருட்களை ஏற்றிச் சென்ற பௌசர் வாகனமொன்றும், குருணாகலையிலிருந்து திருகோணமலைக்குச் சென்ற பௌசர் வாகனமுமே இவ்வாறு மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதில் 35 மற்றும் 46 வயது சாரதியொருவரும் உதவியாளர் ஒருவருமே படுகாயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.









# மக்கள் காங்கிரஸின் பதில் தலைவராக சஹீட் நியமனம்



(பைஷல் இஸ்மாயில்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பதில் தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி என்.எம். சஹீட் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான றிசாத் பதியுதீன், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வு பிரிவில் 90 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் விடுதலை செய்யப்படும் வரை கட்சியின் நடவடிக்கைகளை வினைத்திறனாக முன்னெடுப்பதற்கு தேவையான சில அதிகாரங்களை வழங்கும் நோக்கிலேயே இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அரசியல் உயர் பீடம் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் கூடிய போதே பதில் தலைவர் தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும், கட்சியின் தலைவர் றிசாத் பதியுதீனின் ஆலோசனையுடனேயே இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதுவொரு தற்காலிகமானது என அகில மக்கள் காங்கிரஸின் சட்ட ஆலோசகர் றுஸ்தி ஹபீப் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கடந்த 2005 ஆம் ஆண்டு அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட போது அதன் ஸ்தாபக தலைவராக சிரேஷ்ட சட்டத்தரணி என்.எம். சஹீட் செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# ரிசாட் நல்லவரா கெட்டவரா என்பது அரசியல் தலைவர்களுக்கு தெரியும்

## பிரதேச சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர்




(வாஸ் கூஞ்ஞ)

இப்பொழுது பார்க்கும்பொழுது சட்டநியதிகள் அற்று சர்வதிகாரமே காணப்படுவதை நோக்குகின்றோம். ஆகவே உலக நாடுகளிலுள்ள அனைத்து முஸ்லீம் நாடுகளும் தேசிய தலைவர் ரிசாட்டின் கைது இந்த விடயத்தில் சற்று கண் திறந்து பார்க்க வேண்டும். இவர் இன்றைய அரசியல் தலைவர்களின் காலத்திலும் இவர்களுடன் இணைந்து அரசியல் செய்தவர். ஆகவே இவர் நல்லவரா கெட்டவரா என்பது அவர்களுக்கும் புரியும் என மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர் இவ்வாறு தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி தேசிய தலைவரும் வன்னி பாராளுமன்ற உறுப்பினருமான ரிசாட் பதியுதீனின் கைது தொடர்பாக மன்னார் பிரதேச சபை தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர் ஊடக சந்திப்பில் தெரிவித்ததாவது

எங்கள் கட்சியின் தேசிய தலைவர் ரிசாட் பதியுதீன் எந்தவொரு தவறுகளும் செய்யாமல் இன்று சிறைவைக்கப்பட்டுள்ளார். ஏப்ரல் 21 இல் நடந்த சம்பவம் எவ்வாறு நடந்தது யார் செய்தது என்பது யாவருக்கும் தெரியும்.

இவ் சம்பவம் நடைபெற்று சற்றுநேரத்துக்கள் எமது தலைவரின் பெயரை உச்சரித்து அவருக்கு இழுக்கு ஏற்படுத்தினர். இதை தனது கவனத்துக்கு எடுத்துக்கொண்ட எமது தலைவர் ரிசாட் பாராளுமன்றத்தில் தனது உரையில் இதில் எனக்கு எந்தவித சம்பந்தமும் இல்லை அவ்வாறு என்னில் சந்தேகம் இருக்குமாகில் என்னை விசாரனை செய்து நான் குற்றவாளியாக காணப்பட்டால் எனக்கு மரண தண்டனை தாருங்கள் என தெரிவித்திருந்தார்.

கடந்த இரண்டு வருடங்களாக இவரை பல விசாரனைகளுக்கு உட்படுத்தினர். கடந்த பாராளுமன்ற தேர்தலுக்காக அவர் தனது தேர்தல் தொகுதியில் பிரச்சாரத்துக்கு வந்துவிட்டால் உடன் விசாரனைக்கு வரவும் என அழைப்புதல் வரும். அவர் தனது தேர்தல் பிரச்சாரத்தையும் கைவிட்டு விசாரனைகளுக்கு சென்ற சம்பவங்களும் பல.

அவர்மட்டில் நடைபெற்ற விசாரனைகள் முடிவின்பின் பாராளுமன்ற குழுக்கள், முன்னாள் பொலிஸ் மா அதிபர். நல்லாட்சி காலத்தில்கூட இவர் விசாரனைக்கு உட்படுத்தப்பட்டபோதும் அவர்களின் முடிவில் இவர் இதில் குற்றமற்றவர் என சபாநாயகரும் தெரிவித்திருந்தார்.

இப்படியிருந்தும் எமது தலைவர் ரிசாட்டை கடந்த சனிக்கிழமை அவரின் வீட்டுக்கு அதிகாலை மூன்று மணியளவில் சென்று ஒரு பாதாள கோஷ்டினர்போல் கைதுசெய்து அடைத்துவைத்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு இந்த நாட்டில் சர்வ அதிகாரமும் இருக்கின்றது. அவர் இந்த விடயத்தில் இவரிடம் தவறு இருக்கின்றதா இல்லையா என்பதை பார்க்க வேண்டும்.

இங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எதாவது நடந்தால் சபாநாயகர் ஒரு பொறுப்புகூறும் நபராக இருக்கின்றார். ஆனால் சபாநாயகரின் எந்தவித அனுமதியும் இல்லாமல் இவரை கைதுசெய்தது சரியா என நாம் கேட்டுநிற்கின்றோம் என்றார்.

# சம்மாந்துறையில் அண்டிஜன் பரிசோதனை



(சம்மாந்துறை ஐ.எல்.எம் நாஸிம்)

நாட்டிலும், கிழக்கிலும் பரவலாக பரவிவரும் கோரோனோ அலையை கட்டுப்படுத்தும் நோக்கில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் கடந்த வியாழக்கிழமை சம்மாந்துறை பிரதேச வீதியோர வியாபாரிகள், பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் சுகாதார வழிமுறைகளை பேணாதோர், முகக் கவசம் அணியாமல் வீதிகளில் உலாவித்திரிவோருக்கு அண்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் சிலருக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ஐ.எம் கபீர் வழிகாட்டுதலில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஐ.எல் றாசிக் தலைமையில் பொது சுகாதார பரிசோதகர்கள் சீ.பீ.எம். ஹனீபா, எம்.றஜ்குமார், எம்.ஐ.எம். ஹனீபா, பீ. இலங்கோ உள்ளிட்ட சுகாதார பரிசோதகர்களின் பங்கு பற்றுதலுடன் இடம் பெற்றது.

# 30 பேருக்கு கொரோனா தொற்று உறுதி தலவாக்கலை,சென்கூமஸ் பிரிவு மூடப்பட்டது

(க.கிஷாந்தன்)

தலவாக்கலை, சென்கூமஸ் கிராம சேவகர் பிரிவு நேற்று வெள்ளிக்கிழமை முதல் மறுஅறிவித்தல் விடுக்கப்படும் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளது - என்று லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன், அப்பகுதியில் உள்ள தேயிலை ஆராய்ச்சி நிலையத்துக்கு செல்வதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தலவாக்கலை தேயிலை ஆராய்ச்சி நிலைய ஊழியர்களுக்கும், சென்கூமஸ் தோட்டத் தொழிலாளர்கள் 40 பேருக்கும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில், சுமார் 30 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையிலேயே தனிமைப்படுத்தல் விதிமுறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி தோட்டப்பகுதியில் உள்ள நபரொருவருக்கு வைரஸ் தொற்று உறுதியானதையடுத்து அவருடன் தொடர்பில் இருந்தவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதிலும் சிலருக்கு வைரஸ் தொற்று இருந்துள்ளது. இதனையடுத்தே பி.சி.ஆர் பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையிலேயே தேயிலை ஆராய்ச்சி நிலைய ஊழியர்களுக்கும் வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அதேவேளை, இவ்விரு பகுதிகளுக்கும் வருவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. அனைத்து பாதைகளும் மூடப்பட்டுள்ளன.

# நுவரெலியா மாவட்டத்தில் 43 பேருக்கு கொரோனா தொற்று உறுதி



(க.கிஷாந்தன்)

நுவரெலியா மாவட்டத்தில் 43 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கினிகத்தேன சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், கந்தபளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நால்வருக்கும், கொத்மலை சுகாதார வைத்திய அதிகாரி நால்வருக்கும், லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.

அத்துடன், நோர்வூட் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருவருக்கும், நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 16 பேருக்கும், பூண்டுலோயா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 15 பேருக்கும் வைரஸ் பரவியுள்ளது.

# இந்திய மீனவருடனான தொடர்பை நிறுத்தும்படி மன்னார் மீனவர்களுக்கு எச்சரிக்கை



(வாஸ் கூஞ்ஞ)

தற்பொழுது உலகம் முழுவதும் பரவிவரும் கொவிட் தொற்றுநோயிலிருந்து இலங்கையையும் குறிப்பாக மன்னார் மாவட்டத்தையும் பாதுகாக்கப்பட வேண்டுமானால் மன்னார் மாவட்ட மீனவர்கள் இந்திய மீனவர்களுடன் கொண்டுள்ள நேரடி தொடர்புகளை தவிர்த்துக் கொள்ளுமாறு மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்களம் விழிப்புணர்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

தற்பொழுது இந்தியா மற்றும் இலங்கையில் தீவிரமாக பரவிவரும் கொரோனா தொற்றுநோயிலிருந்து நம்மை நாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நிலைக்கு ஒவ்வொருவரும் தள்ளப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இந்தியா மிக அன்மித்த நாடாக இருப்பதுடன் கடலிலும் சட்ட விரோத கடத்தல் மற்றும் ஆட்களை எற்றி இறக்குதல் போன்ற செயல்பாடுகளிலும் மன்னார் மாவட்ட மற்றும் இந்திய மீனவர்கள் சிலர் தீவிரமாக ஈடபட்டு வருவது கடந்தகால செயல்பாடுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாக என தெரிவிக்கப்படுகின்றது.

இதைக் கவனத்துக்கு எடுத்துள்ள மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்களம் மன்னார் மாவட்டம் முழுவதும் மக்களுக்கும் குறிப்பாக கடற்தொழிலாளருக்கும் விழிப்புணர்வை முன்னெடுத்து வருகின்றது.

அதாவது கொவிட் தொற்றுநோயிலிருந்து நாட்டையும் மாவட்டத்தையும் பாதுகாக்க இந்திய மீனவர்களுடன் தொடர்புகளை தவிர்க்குமாறு மன்னார் தீவில் மன்னார் முதல் தலைமன்னார் வரையும் மன்னார் பெரும் நிலப்பரப்பில் வங்காலை முதல் சிலாபத்துறை வரையும். விடத்தல் தீவு தொடக்கம் வெள்ளாங்குளம் வரைக்கும் உள்ள கடற்தொழிலாளர்களுக்கு நடமாடும் வாகன ஒலிபெருக்கிகள் மூலம் அறிவுறுத்தல்களையும் விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

# நஞ்சற்ற உணவினை உட்கொள்வதன் முக்கியத்துவம்;செயற்றிட்டம் ஆரம்பம்



(வ.ராஜ்குமார்)

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவல் அதிகரித்து வருகின்ற இக் காலப்பகுதியில் அனைவரும் வீடுகளில் இருப்பதுடன் பாதுகாப்பான முறைகளை பின்பற்றவேண்டியதன் அவசியம் தொடர்பாக அஏகீஇ நிறுவனம் விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகின்றது.

அத்துடன் மக்கள் வீடுகளில் இருக்கின்ற காலத்தில் பாரம்பரிய முறையிலான வீட்டுத்தோட்ட செய்கையினை மேற்க்கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் எமது ஆரோக்கியமான உணவு தேவையினை நாமே பூர்த்தி செய்வதற்கான நிலைபேறான வாழ்வாதாரம் மற்றும் நஞ்சற்ற உணவினை உட்கொள்வதன் முக்கியத்துவத்தினை ஏற்படுத்துவதற்கான செயற்றிட்டத்தின் ஊடாக பாரம்பரிய விதை தானியங்களை அஏகீஇ நிறுவனம் வழங்கிவருகின்றது.

மூதூர், கந்தளாய், தம்பலகாமம் மற்றும் வாகரை பிரதேசங்களில் உள்ள 65 குடும்பங்களிற்கு வாழ்வாதார திட்ட இணைப்பாளர் திரு .ஜெகதீஸ் தலைமையில் பிரதேசங்களிற்கு பொறுப்பானகள இணைப்பாளர்கள் திரு.அரவிந்தன், திரு.ரமேஸ், திரு.மகாதேவன், திரு .கிருசாந் மற்றும் திருமதி. கலாராணி ஆகியோரால் விதை தானியங்கள் வழங்கிவைக்கப்பட்டது.




# 20 கோடி ரூபா ஒதுக்கீட்டில் கிராமிய வீதிகள் புனரமைப்பு



(வி.சுகிர்தகுமார்)

ஜனாதிபதியின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கமைய செளபாக்கிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் 20 கோடி ரூபா ஒதுக்கீட்டிலான வீதிகள் நிர்மாணிப்பு பணிகள் அக்கரைப்பற்று மற்றும் நிந்தவூர் பிரதேசங்களில் இடம்பெற்று வருகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் ஐ.எச்.வஹாப்பின் முயற்சியின் பயனாக அரசாங்கத்தின் கிராமி வீதிகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் குறித்த வீதிகள் கொங்றீட் வீதிகளாக மாற்றம் பெற்று வருகின்றன.

இதற்கமைவாக குறித்த பகுதிகளில் நிந்தவூர் தோப்புக்கண்ட வீதி, அக்கரைப்பற்று 20, 21 பொது வீதி, அக்கரைப்பற்று தேசியபாடசாலை மேற்கு வீதி, தீகவாபி வீதி, அக்கரைப்பற்று ஈச்சம்பத்து தருகா பள்ளி வீதி, இலுக்குச்சேனை வண்ட் றோட், அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு குறுக்கு வீதி, பள்ளிக்குடியிருப்பு இசங்கனிசேனை குறுக்கு வீதி உள்ளிட்ட 8 வீதிகள் துரிதமாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

# புர்க்கா தடை முஸ்லிம்களுக்கு பாதுகாப்பானது!

## அலி சப்ரி ரஹீம் எம்.பி. கருத்து!!



(சில்மியா யூசுப்)

புர்கா தடை முஸ்லிம் சமூகத்திற்கு சாதகமான ஒன்று என்பது என் கருத்து. ஏனெனில் எதிர்காலத்தில் புர்கா என்பது முஸ்லிம்கள் மீது பயங்கரவாத பழி சுமத்தும் சாதனமாக அமையக் கூடும் என புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

"கடந்த பல தசாப்தங்களாக புலிகளின் காலம் தொட்டு ஸஹ்ரான் என்னும் பயங்கரவாதியின் ஈஸ்டர் தாக்குதல் வரை நமது நாடு பயங்கரவாத நிலமைக்கு முகம் கொடுத்து வந்துள்ளது. அதனால் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் இன ஒருமைப்பாடு போன்றவை சீர் குலைந்து நாட்டில் அமைதியின்மை இன்று வரை நிலவுகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் தற்போது சர்ச்சைக்குரிய பேசு பொருளாக மாறியுள்ள புர்கா பற்றிய தெளிவான பார்வை எம் சமூக மட்டத்தில் முன் வைக்கப்பட வேண்டியுள்ளது.

எமது நாட்டு முஸ்லிம் பெண்களில் பத்து வீதத்துக்கும் குறைவானவர்களே புர்கா அணிகிறார்கள். குறிப்பிட்ட புர்க்கா அணிதல் இஸ்லாத்தில் கட்டாயமாக்கப்பட்ட ஒன்றல்ல என்பதே பெரும்பாலான மார்க்க அறிஞர்களின் கருத்தாக உள்ளது. தட்ப வெப்ப நிலைமைக்கேற்ப அணியப்பட்ட பாலைவன மகளிரின் கலாச்சார ஆடையே அதுவாகும். ஆனால் பிறிதொரு சந்தர்ப்பத்தில் எம் குல பெண்களுக்கு குறிப்பிட்ட முகத்திரை மார்க்க அடையாளமாக குத்தபட்டதன் விளைவே இன்று முஸ்லிம் மக்களின் மானசீக போராட்டமாக மாறியுள்ளது.

அவ்ரத்தை மறைத்தல் என்பது இஸ்லாத்தில் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளது. மணிக்கட்டு, முகம் தவிர ஏனைய பகுதிகளை மறைத்தலே இஸ்லாமிய பெண்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பெண்கள் முகத்தை மறைப்பது ஓர் அடையாளமே அன்றி மார்க்க கடமையல்ல என்னும் உண்மையை எம் அறிஞர்கள் சமூக மட்டத்தில் எடுத்தியம்ப வேண்டும்...எல்லாம் வல்ல அல்லாஹ் உள்ளத்தை பார்ப்பவனாக இருக்கிறான்.

ஆனாலும் ஓர் உண்மையை சொல்லி ஆக வேண்டும். இதுவரை எம் நாட்டில் நிகழ்ந்த பயங்கரவாத தாக்குதல்களில் புர்கா அல்லது ஹபாயா அணிந்து எவரும் தாக்குதல்களில் ஈடு படவில்லை என்பதே அந்த உண்மையாகும். இதே விதமாக புர்கா அணிந்து தற்கொலை குண்டுதாரிகள் பயங்கரவாதி சஹ்ரானின் கும்பலில் செயல்படவுமில்லை என்றார்.

WWW.SUPEEDSAM.COM

# ஹெரோயினுடன் தந்தையும் மகனும் கைது!

## - போதைபொருள் பாவனையாளர் குறித்து தகவல் தர கோரிக்கை!!

(பாறுக் ஷிஹான்)



நீண்ட காலமாக ஹெரோயின் போதைப்பொருட்களை சூட்சுமமாக விற்பனை செய்து வந்த தந்தையும் மகனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனைக்குடி கிரீன் பீல்ட் தொடர்மாடி வீட்டுத்தொகுதியில் வியாழக்கிழமை(6) இரவு மாவட்ட புலனாய்வு பிரிவு மற்றும் விசேட புலனாய்வுப் பிரிவுக்கு நோன்பு காலங்களில் போதைப்பொருள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சுற்றிவளைப்பு ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

இச்சுற்றிவளைப்பு நடவக்கையினை கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுஜித் பிரியந்தவின் மேற்பார்வையில் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் அருணன் பொலிஸ் கொஸ்தாபல்களான மதுரங்க (68757), அருண( 75278), செலர்( 40313) ,சுலக்சன் (96553 ), ரதீஸ்குமார் (89382 ) , நிமால் (81988) ,பெண் பொலிஸ் கொஸ்தாபல் மதுவந்தி(11711), மற்றும் சிவில் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர் றிஹால் (6045),ஆகியோர் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.

இதன் போது சுமார் இரண்டு லட்சத்தி இருபத்தி ஐயாயிரம் பெறுமதியான 18.01 கிராம் அளவிலான ஹெரோயின் 13 பொதிகளாக அடைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதுடன் குறித்த போதைப்பொருட்களை தம்வசம் வைத்திருந்த தந்தை மற்றும் மகன் இருவரும் கைதாகினர்.

இவ்வாறு கைதாகிய இருவரையும் கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் இவ்வாறான போதைப் பொருட்கள் வியாபாரம் செய்பவர்கள் மற்றும் அவற்றை வாங்கி உபயோகிப்பவர்கள் சம்பந்தமாக தகவல் ஏதும் கிடைக்கப் பெற்றால் கல்முனை பொலிஸ் நிலையத்திற்கும் அறிவிக்குமாறு பொதுமக்களிடம் பொலிஸார் கேட்டுள்ளனர்.

இதே வேளை கடந்த சில தினங்களுக்கு முன்னரும் இப்பகுதியில் போதைப்பொருளுடன் நால்வர் கைதாகி 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிள்ளையானுக்கும், பிரேமலால் ஜெயசேகர விற்கும் ஒரு சட்டம் ரிஷாட் பதியுதீனுக்கு இன்னும் ஒரு சட்டமா?

## எஸ்.எம்.எம். முஷாரப் பா.உ

(சில்மியா யூசுப்)

"நாடாளுமன்ற உறுப்பினர்களான பிள்ளையானுக்கும் பிரேமளால் ஜெயசேகர விற்கும் ஒரு சட்டம் ரிஷாட் பதியுதீனுக்கு இன்னும் ஒரு சட்டமா"

ஒரே நாடு ஒரே சட்டம் இதுதானா என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ் எம் எம் முஷாரப் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் எந்த வித அடிப்படையும் அற்ற விதத்தில் நிகழ்ந்துள்ள முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதுயுதீனின் கைது எமக்கு சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

வியாழக்கிழமை (06) கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்

முன்னாள் அமைச்சர் ரிஷாதின் கைது நடந்த விதம் இந்த கைது தொடர்பான நகர்வுகள், எல்லாமே மேலும் சில சந்தேகங்களைத்தான் எங்களுக்குள் வலுப்படுத்தி இருக்கின்றது,

நீதியான முறையிலே இந்த கைது இடம்பெற்றிருந்தால் அல்லது இந்த கைதினை அடுத்து பத்திரிகையாளர் சந்திப்பில் ஊடகபேச்சாளர் முதல் பாதுகாப்பு அமைச்சர் வரை சொன்ன கருத்துக்களை பார்க்கும்போது, பல்வேறு ஆதாரங்கள் இருக்கின்றது விஞ்ஞானப்பூர்வமான சில ஆதரங்களின் அடிப்படையில் இந்த கைது இடம்பெற்றிருந்தது என்று சொன்னதற்கு அமைவாக ஏதேனும் நிகழ்த்திருந்தால் நாம் சிந்தித்திருக்கமுடியும்,

ஆனால் ஒன்றுமே இல்லாது அடிப்படையே இல்லாத ஒரு நிலையில்தான் இந்த கைது இடம்பெற்றிருக்கின்றது இந்த கைது மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்க ஒரு கைது அதிலும் நீங்கள் பார்த்தீர்களாக இருந்தால் ஒரு பாராளுமன்ற உறிப்பினராக ஒருவருக்கு இருக்கின்ற சிறப்பு உரிமையின் அடிப்படையிலே ஒருவர் பாராளுமன்றதிற்கு வரக்கூடிய சந்தர்ப்பங்கள் இருக்கின்றதன. அந்த அடிப்படையில் எமது தலைவரின் பாராளுமன்ற வருகை என்பது நேற்று 05 மற்றும் நேற்றைய முன்தினம் என இரு தினங்களும் மறுக்கப்பட்ட வேளையிலே பல்வேறு குழப்பங்கள் இருந்ததை எம்மால் பார்க்க முடிந்தது. பாராளுமன்றத்தில் அவர் வருவதற்கான அனுமதி சபாநாயகரினால் ஏற்கனவே வழங்கப்பட்டு இருந்ததனால் அதற்கான குழுத்தீர்மானமும் எடுக்கப்பட்டிருந்தது ,

இருப்பினும் குறித்த தினத்தில் அவர் அழைத்து வரப்படவில்லை .அது தொடர்பாக கேட்கப்பட்ட போது இரண்டு மூன்று காரணங்கள் சொல்லப்பட்டது. நாங்கள் பாராளுமன்றத்தில் இது தொடர்பாக வினவிய போது, கேட்டறிந்து சொல்வதாக தெரிவித்திருந்தார்கள். பின்னர் சட்டச்சிக்கல் இருப்பதாக சொல்லப்பட்டது. ஆனால் சட்டமா அதிபரோ,பாராளுமன்றத்துக்கு கௌரவ தலைவர் ரிஷாட் பதியுதீன் அவர்கள் வருவதில் எந்தவொரு சட்டச்சிக்கலும் இல்லை என்பதை தெளிவாக தெரிவித்திருந்தார். அதற்கு பிறகு இது தொடர்பாக நாங்கள் சார்ஜெண்ட் ஒப் ஆம்ஸ் அவர்களை சந்தித்து இது விடயம் தொடர்பாக நான் வினவிய போது அங்கே சிறைச்சாலையில் பணியாற்றிய ஒருவரின் மனைவிக்கு கோரோனா தொற்று இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அதன் காரணமாக கோரோனா பரவல் இருப்பதால் கொண்டுவர முடியாது என்று முன்னுக்கு பின் முரணான மூன்று காரணங்கள் சொல்லப்பட்டன. இப்படியான ஒரு சூழ்நிலையில் தான் அமைச்சர் சரத் வீரசேகர அவர்கள் எமது கட்சியின் தலைவர் ரிஷாட் பதியுதீன் அவர்களை பாராளுமன்றதிற்கு கொண்டுவரக்கூடாது என்பதான ஒரு கோரிக்கையை அங்கே பாராளுமன்றத்தில் முன்வைத்தார் அவ்வாறான ஒரு கோரிக்கையை முன் வைப்பது என்பது எந்த ஒரு சட்ட வரையறைக்கு உட்பட்ட கோரிக்கை என்பதுதான் இங்கே ஒரு கேள்விக்குறியாக இருக்கின்றது. ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு இருக்கின்ற சிறப்பு உரிமையை மீறி அவரை அழைத்து வர கூடாது என்றவாறு உரிய அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினராகவோ அல்லது ஒரு அமைச்சராகவோ பாரளுமன்றதிற்குள் அவ்வாறான ஒரு கோரிக்கையை அவர் விடுக்க முடியாது. அதனை மீறி அவர் எவ்வாறு அந்த கோரிக்கையை விடுக்க முடியும் எனவே அப்படியான ஒரு கோரிக்கையை அவர் விடுக்கிறார் என்றால் இந்த பாராளுமன்றதிற்கு அவர் அழைத்து வரப்படாததில் இருந்து அல்லது அவர் கைது செய்யப்பட்டத்தில் இருந்து வேறு சில நோக்கங்கள் இருக்கின்றது என நாங்கள் தெளிவாக புரிந்துகொள்ள முடியும் என்பதை நான் இங்கு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன் என்றார்.

# நாடு முழுவதிலும் இன்று மாலை 5.46க்கு மஹா மிருத்யுஞ்சய ஹோமம்



(வி.ரி.சகாதேவராஜா)

நாடும் முழு உலகமும் கொரோனா வைரஸ் தொற்றிருந்து விடுபட வேண்டும் என்பதை வலியுறுத்தி சகல வணக்கஸ்தலங்களிலும் இன்று(08) மாலை 5.46 மணிக்கு விசேட வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இதற்கமைவாக கோவில்களில் விசேடமாக பஞ்ச ஈஸ்வரங்களில் மஹா மிருத்யுஞ்சய ஹோமம் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் எண்ணக்கருவுக்கமைய மேற்கொள்ளப்படவுள்ள இப்பூஜை வேளையில் பொதுமக்கள் அனைவரும் வீடுகளிலில் இருந்தவாறே பிரார்த்தனை வழிபாடுகளில் ஈடுபட வேண்டுமென்றும் இலங்கையை விட்டும உலகத்தை விட்டும் கொரோனா நீங்க வேண்டும்மென்றும் பிரார்த்தனை செய்துகொள்ளுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கொரோனாவால் பாதிப்படைந்தவர்கள் சுகமடைய வேண்டும்இ சகலரும் வளமான வாழ்க்கையப் பெறவேண்டும் என்று இறைவனை மனதார ஒருமித்துப் பிரார்த்திக்குமாறு சமய கிரியைகள் புத்தசாசன மத விவகார அமைச்சின் இந்து சமய விவகார இணைப்பாளரும் சர்வமத இந்து பீட செயலாளருமான கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா கோரிக்கை விடுத்துள்ளார்.

சகல ஆலயங்களில் ஹோமம்!

உலக மக்களின் நன்மையையும் இலங்கை வாழ் மக்களின் நன்மையையும் வேண்டிச் சர்வமதப் பிரார்த்தனை இன்று நடாதத் இந்துசமய கலாசார திணைக்களம் கேட்டுள்ளது.

தற்போது உலகை உலுக்கிவரும் கோவிட் - 19 தொற்றுப் பரம்பல் நீங்கி சுபீட்சமானதொரு வாழ்வு மலர உலக மக்களின் நன்மையையும் இலங்கை வாழ் மக்களின் நன்மையையும் வேண்டிச் சர்வமதப் பிரார்த்தனையினை ஒரே நேரத்தில் இன்று 08.05.2021 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 5.46 மணிக்கு இலங்கைத் திருநாட்டில் உள்ள அனைத்து சமயத் தலங்களிலும் நிகழ்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் திருநாட்டின் மாண்புமிகு பிரதமர் அவர்களது எண்ணத்தில் உதித்த இந்தத் தார்மீகச் சிந்தனையை புத்த சாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு நாடாளாவிய ரீதியில் முன்னெடுப்பதற்கான அறிவுறுத்தல்களைச் சம்பந்தப்பட்ட திணைக்களங்களிடம் அறிவுறுத்தியுள்ளது.

இதன் பிரகாரம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இலங்கையில் உள்ள அனைத்து இந்து ஆலயங்களிலும் இத்தருணத்தில் விசேட வழிபாட்டினை மேற்கொள்ளுமாறும் இந்த விசேட வழிபாட்டில் இயன்றளவிற்கு மஹாம்ருத்யுஞ்ஜய யாக வழிபாட்டினையும் நிகழ்த்தி வழிபாடாற்றுமாறும் இந்த விசேட வழிபாட்டினை ஆலய அறங்காவலர் மற்றும் கிரியைகளை நிறைவேற்றும் சிவாசாரியார்களோடு மட்டுப்படுத்தி ஆற்றிக்கொள்ளுமாறும் இந்து மக்கள் அனைவரும் தங்கள் வதிவிடங்களில் இருந்தபடியே இத்தருணத்தில் விளக்கேற்றி மானசீகமாகப் பிரார்த்தனையை நிறைவேற்றுமாறும் அன்போடு கேட்டுக்கொள்கிறது என திணைக்களப்பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

PHOTO DIGITAL INTERNATIONAL
No. 6N, Mosque Lane, Kalmunai.
MASTER PRINTERS
Best Regional Printer For the Year 2013
No. BG6, Maligawatta National House Scheme, Colombo 10.
Mobile : 077 613 9227 / 075 260 0333 / 075 963 0000 E-mail : mmjesmin06@gmail.com

# ஈழத்தமிழர் நல்வாழ்விற்கு ஆதரவு வழங்குங்கள்

## தமிழக முதல்வரிடம் பி2பி இயக்கம் வேண்டுகோள்

(அலுவலக நிருபர்)

ஆண்டாண்டு காலமாக தாய்த்தமிழக தொப்புள்கொடி உறவுகளுக்கும், ஈழத்தமிழருக்கும் இடையில் காணப்படும் பண்பாட்டு மற்றும் கலாசார ரீதியான இறுக்கமான உறவே தமிழ்த்தேசியத்தின் உறுதியான வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும். ஈழத்தமிழர் நல்வாழ்விற்கு தொடர்ச்சியாக ஆதரவு வழங்குங்கள் என பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் தமிழக புதிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் தமிழக புதிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வரைந்துள்ள வாழ்த்துக் கடிதத்திலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழகத்தில் நடைபெற்ற 2021 சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று இன்று பதவி ஏற்கும் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழக (தி.மு.க) அரசிற்கு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம் சார்பாகவும், ஈழத்தமிழர் சார்பாகவும் வாழ்த்துகளைத் தெரிவித்து கொள்கின்றோம். தமிழகத்தின் முதல்வராக முதன்முறையாக பதவியேற்கும் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விசேடமாக எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாங்கள் பதவி ஏற்றதும் தி.மு.க தேர்தல் விஞ்ஞாபனத்தில், ஈழத் தமிழர் நல்வாழ்வு எனும் தலைப்பின் கீழ் முன்மொழியப்பட்ட, இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவை குறித்துச் சுதந்திரமானதும், நம்பகத்தன்மை வாய்ந்ததுமான சர்வதேச விசாரணையை மேற்கொள்ள இந்திய அரசு உலக நாடுகளை வலியுறுத்திச் செயற்படுத்த வேண்டுமென மத்திய அரசை தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தும் மற்றும் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முழுவதும் நீர்த்துப்போன அரசியல் அதிகாரப் பங்கீடுகளே அனுமதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள தமிழர்களின் விருப்பத்திற்கேற்றவாறு நிரந்தரமான அரசியல் தீர்வு அமைய இலங்கையில் உள்ள தமிழர்கள் மற்றும் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களிடையே ஐ.நா. சபையின் மேற்பார்வையில், பொதுவாக்கெடுப்பு நடத்தவும், இலங்கையில் புதிதாக உருவாக உள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தில் முழுமையான அதிகாரங்கள் தமிழர்களுக்குக் கிடைத்திடும் வகையில் சட்டப் பிரிவுகளை உருவாக்கவும் இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டுமென மத்திய அரசை தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தும் ஆகிய அம்சங்களுடன் ஈழத்தமிழர் தொடர்பான மற்றைய வாக்குறுதிகளிலும் அமைத்திருக்கும் புதிய அரசு விசேட கவனம் செலுத்துமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆண்டாண்டு காலமாக தாய்த்தமிழக தொப்புள்கொடி உறவுகளுக்கும் ஈழத் தமிழருக்கும் இடையில் காணப்படும் பண்பாட்டு மற்றும் கலாசார ரீதியான இறுக்கமான உறவே தமிழ்த்தேசியத்தின் உறுதியான வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையும். ஈழத்தமிழினத்தின் உறுதியும் பலமுமே இந்திய தேசத்தின் தென்கோடிக் கரையினதும் தமிழகத்தினதும் பாதுகாப்பிற்கு இன்றியமையாதது என்பதனை மீண்டும் இவ்விடத்தில் கோடிட்டு காட்டுவதுடன் அந்நிலை மீண்டும் உருவாவதற்கு ஈழத் தமிழினத்தினை பலப்படுத்த வேண்டிய தார்மீக கடமை தமிழ்நாட்டுக்கு உண்டு என்பதை உரிமையுடன் வலியுறுத்த விரும்புகின்றோம். தங்களின் ஆட்சிக் காலத்தில் தமிழகம் மென்மேலும் வளர்ச்சியுறவும், ஈழத்தமிழினத்தினுடனான உறவு வலுப்பெறவும் எதிர்பார்த்திருக்கின்றோம். தற்போது காணப்படும் கோவிட் 19 பேரிடரிலிருந்து தமிழகம் மிக விரைவில் மீண்டுவர நாமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தை வைத்து தமிழ் - முஸ்லிம் தொப்புள் கொடி உறவை பிரிக்காதீர்கள்

## கலாநிதி.வி.ஜனகன்

கல்முனையை பொருத்தவரை நான் அறிந்த வகையில் மிக நீண்ட காலமாக தமிழ் முஸ்லிம்களின் உறவு ஒரு நீண்ட தொப்புள் கொடி உறவாகவே இருந்து வருகிறது.

இந்த உறவை பிரிப்பதற்கான சில அரசியல்வாதிகளின் சதியாக்கூட இந்த விவகாரம் இருக்கலாம் என்ற சந்தேகமும் என் மனதில் வலுக்கிறது என கலாநிதி.வி.ஜனகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலக பிரச்சினையானது மிக நீண்ட நாட்களாக உருவெடுத்த ஒரு பிரச்சினையாக தொடர்ந்து கொண்டு இருக்கின்றது என்பதை நான் ஆரம்பத்தில் களத்தில் நின்று



அறிந்திருக்கிறேன். இந்த விடயத்தில் சில அரசியல் வாதிகள் இரண்டு பக்கமும் அலசி ஆராய்ந்து முடிவு ஒன்றை பெற்றுத் தருவார்கள் என்று மேல் மட்டங்களில் சிறுபான்மை தலைமைகள் எல்லாம் பேசிக் கொண்டன. ஆனால், எதுவுமே நடக்கவில்லை. இன்றுவரை, சம்பந்தப்பட்ட மக்கள் மட்டும் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வருகிறார்கள் என்பதே உண்மை.

இது இவ்வாறிருக்க இப்பிரச்சினையை அரசியல்வாதிகள் தங்களுக்கு சாதகமான முறையில் அரசியலுக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

பிரச்சினைகளை வைத்து உசுப்பேத்தி அரசியல் செய்வதை நாங்கள் கண்டு கூடே கண்டு வந்திருக்கிறோம்.

ஆனால் அமைதி காத்திருக்கின்ற கல்முனை வாழ் தமிழ் பேசும் சாதாரண தமிழ்,முஸ்லிம் மக்களை தூண்டிவிட்டு தமிழ் முஸ்லிம் தொப்புள் கொடி உறவை பிரிக்க முயற்சிப்பது மிகுந்த வேதனை அளிக்கிறது.

இந்த விடயத்தை வைத்து இரு தரப்பினரும் அரசியல் காய்களை நகர்த்துகின்றனர் என்பதும் தெளிவாக தெரிகிறது.

இது ஒரு தரப்பினரை சார்ந்த விடயம் அல்ல மாறாக தமிழ் முஸ்லிம் எனும் இரு தரப்பினரையும் சார்ந்த விடயமாகும்.

ஆகவே! கல்முனை மாநகர சபைக்குட்பட்ட தமிழ் முஸ்லிம் முக்கியஸ்தர்கள் ஒன்றிணைந்து அவர்களினால் சுமூகமாக தீர்க்கப்பட வேண்டிய ஒரு விடயமே இது.

ஆனால், அரசியல்வாதிகள் தங்களுடைய தனிப்பட்ட அபிலாசைகளுக்காக இந்த விடயத்தை தூக்கிப் பிடித்துக் கொண்டு அலைவதை நானும் அரசியலுடன் தொடர்புபட்டவன் என்ற வகையில் பார்த்து வெட்கப்படுகிறேன்.

கல்முனையை பொருத்தவரை நான் அறிந்த வகையில் மிக நீண்ட காலமாக தமிழ் முஸ்லிம்களின் உறவு ஒரு நீண்ட தொப்புள் கொடி உறவாகவே இருந்து வருகிறது.

இந்த உறவை பிரிப்பதற்கான சில அரசியல்வாதிகளின் சதியாக்கூட இந்த விவகாரம் இருக்கலாம் என்ற சந்தேகமும் என் மனதில் வலுக்கிறது.

உப பிரதேச செயலக விவகாரமானது ஒரு நிருவாகம் சார்ந்த விவகாரம் ஆகவே தயவு செய்து இந்த விவகாரத்தை வைத்து

உசுப்பேத்தி அரசியல் செய்வதை விட்டுவிட்டு இருபக்கமும் இருக்கின்ற முக்கியஸ்தர்களை அழைத்து கலந்துரையாடி இதற்கு சுமூகமான தீர்வை கொண்டு வாருங்கள் என்பதை மிக வினயமாக கேட்டுக் கொள்கிறேன்.

என ஜனனம் அறக்கட்டளையின் தேசியத் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தருமான கலாநிதி.வி.ஜனகன் தனது அறிக்கையில் தெரிவித்தார்.

## குருமண்வெளியில் கோரோனா தோற்றால் ஒருவர் உயிரிழப்பு

நபர் ஒருவர் திடீர் சுகயீனம் காரணமாக களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் உயிரிழந்த நிலையில் அனுமதிக்கப்பட்ட போது மேற்கொள்ளப்பட்ட றபிட் அன்ரிஜன் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுத்திப்படுத்தப்படாததுடன், சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு வியாழக்கிழமை(06) மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் வெள்ளிக்கிழமை(07) கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட குருமண்வெளி - 12 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பாலர் பாடசாலையில் வீதி, மற்றும் அதனை அண்டியுள்ள குறுக்கு வீதிகள், அனைத்தும் போக்குவரத்து அற்ற நிலையில் முற்றாக மூடப்பட்டுள்ளது.

அப்பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டவர்களின் வீடுகளுக்கு சுகாதாரத் துறையினர் கட்டாய தனிமைப்படுத்தப்படும் இஸ்ரிக்கர்கள் வெள்ளிக்கிழமை ஒட்டினர்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள மக்கள் வெளியே நடாமாட பொதுசுகாதரத் துறையினர் தடை விதித்துள்ளனர். இந்நிலையில் அப்பகுதியில் சுகாதார பரிசோதகர்கள், களுவாஞ்சிகுடி பொலிசார், மற்றும் இராணுவத்தினர் இணைந்து சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மட்டக்களப்பில் கோவிட் 19 கட்டுப்படுத்த முழுமையான பங்களிப்பை வழங்குவோம்:மாநகர முதல்வர் அறிவிப்பு

கட்டுப்படுத்துவதாயின் நடவடிக்கைகளை இறுக்கமாக்கும் போதே அது சாத்தியமாகும். எனவே மட்டக்களப்பு மாநகரப் பகுதியில் கொவிட் 19 தொற்றினை முழுமையாக கட்டுப்படுத்த எமது மாநகர சபையின் முழுமையான பங்களிப்பை சுகாதாரத் துறையினருக்கு வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கின்றோமென மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்திருந்தார்.

மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குள் செயற்பட்டுவருகின்ற கொவிட் 19 கட்டுப்பாட்டு செயலணியின் விசேட கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு நகர மண்டபத்தில் மாநகர முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

தொடர்ந்தும் அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், குறிப்பாக வர்த்தக நிலையங்கள் இரவு 9.00 மணியுடம் தமது வர்த்தக செயற்பாட்டை நிறுத்த வேண்டுமென்றும், ஒரு மீற்றர் இடைவெளிக்குள் எத்தனை பேரை தமது வர்த்தக நிலையங்களுக்குள் வைத்திருக்க முடியுமோ அந்த தொகையில் 25 வீதமானவர்களையே தங்களது வர்த்தக நிலையங்களுக்குள் அனுமதி முடியுமெனவும், இதனை பொது சுகாதார பரிசோதகர்கள் கண்காணிப்பார்களெனவும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் கிராம மட்டத்தில் நடக்கின்ற செயற்பாடுகளை அவதானிப்பதற்கு பிரதேச செயலாளரில் தலைமையில் இயங்குகின்ற பிரதேச மட்ட செயலணிக்கு வட்டாரத்தில் தெரிவு செய்யப்பட்ட மாநகர சபை உறுப்பினர்களையும் இணைத்து குறித்த செயலணிக்கு பயன்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும், அனைத்து ஆலயங்கள், பொது நிறுவனங்களும் தொடர்ச்சியாக கொரோனா தொற்று தொடர்பான தெளிவூட்டல்களை பொதுமக்களுக்கு வழங்க வேண்டுமென்றும், மாநகரசபையும் தொடர்ச்சியாக இவ்வாறான தெளிவூட்டல் செயற்பாடுகளுக்கு பூரண பங்களிப்பினை சுகாதார திணைக்களத்திற்கு வழங்குவதாகவதெனவும் தீர்மானித்திருப்பதாகவும், எதிர்வரும் நாட்களில் ஒவ்வொரு பிரதேசங்களிலும் திடீர் விஜயம் மேற்கொள்ளும் போது சுகாதார நடைமுறையினை பின்பற்றாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், எதிர்வரும் 14 ஆம் திகதி அட்சயதிருதியை வருவதன் காரணமாக அதனை கொண்டாடுவதற்கு எந்த அனுமதியுமில்லை, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களை மாத்திரம் உள்வாங்கிய நிலையில் வியாபார நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டும். அல்லாதவிடத்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வர்த்தக நிறுவனங்கள் கொவிட் கட்டுப்பாட்டு தனிமைப்படுத்தல் சட்ட திட்டங்களை மீறுவார்களானால் அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அதேபோன்று பொது மக்கள் கொவிட் தொற்று பரவாமலிருப்பதற்கு தம்மாலான முழு ஒத்துழைப்பையும் வழங்கி கொவிட் விதிமுறைகளுக்கு அமைவாக நடந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்வதாகவும் தெரிவித்திருந்தார்.

இதன்போது மாநகரசபையின் பிரதி முதல்வர்கே.சத்தியசீலன், மண்முனை வடக்கு உதவிப் பிரதேச செயலாளர் பொறியியலாளர் ஜீ.அருணன், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி டீ.கே.கிரிசுதன், மாநகர சபையின் பிரதி ஆணையாளர் மற்றும் மாநகர சபையின் நிருவாக உத்தியோகத்தர்கள் அடங்களாக பொது சுகாதார பரிசோதகர்கள், பொலிஸ் அதிகாரிகலென மட்டுப்படுத்தப்பட்டளவிலானோர் சுகாதார நடைமுறைகளுக்கேற்றாற்போல் கலந்துகொண்டிருந்தனர்.

## "கல்முனை விவகாரத்தில் ஒன்றிணையுங்கள்"

### முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அம்பாறை அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம் அழைப்பு

மாவட்ட அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம் கேரிக்கை விடுத்துள்ளது.

அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம் ஏற்பாடு செய்த விசேட ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை மாலை கல்முனை முஹைதீன் ஜு`ம்ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் சம்மேளனத்தின் தலைவர் டொக்டர். எஸ். எம். அப்துல் அஸீஸ் கருத்து தெரிவித்தார் இதன் போது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரது அண்மைக்கால உரைகள் தொடர்பாக கருத்து தெரிவித்தார். இதன் போதே இவ்வாறு தெரிவித்த சம்மேளனத்தின் தலைவர், தொடர்ந்து உரையாற்றும் போது,

பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அவர்கள் முஸ்லிம் சமூகத்தின் நலனுக்காக குரல் கொடுப்பவராக ஆரம்பத்தில் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு இன்று முஸ்லிம் சமூகத்தின் முதுகுகளில் குத்துகின்ற ஒருவராக உண்மையான முகத்தை காட்டியுள்ளார். கல்முனை தொடர்பாக இவர் வெளியிட்ட கருத்துக்கள் கவலையளிக்கிறது. இவர் அரசியலுக்கு புதிதாக இருக்கலாம் ஆனால் அரசியல் அனுபவம் இல்லை. விடயங்களை நன்கு அறிந்து உரையாற்ற வேண்டும்.

கல்முனை மாநகரம் முஸ்லிம் சமூகத்தின் இதயம் இதனை ஏனைய சமூகங்களுக்கு யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டிய தேவையில்லை. கல்முனை மாநகரத்தின் பூர்வீக வரலாற்று நெடுகிலும் இதனுடைய ஆளுகை முஸ்லிம் சமூகத்தை சார்ந்ததாகவே இருந்திருக்கிறது. இதற்கான ஆதாரங்கள் ஏராளம் உள்ளன.

கல்முனையில் முஸ்லிம்கள் 70 வீதமும் தமிழர்கள் 30 வீதமும் வாழ்ந்து வருகின்றனர். வரலாற்றை புரட்டிப் பார்த்தால் முஸ்லிம்களின் கேந்திர மத்திய நிலையமாக கல்முனை இருந்து வந்திருப்பதை அறியலாம்.

அரசியல் ரீதியாக கிராம ஆட்சி முறைமை இருந்த காலப்பகுதிகளில் கல்முனை ஸாகிறா கல்லூரி தொடக்கம் பாண்டிருப்பு தாளவட்டுவான் வரைக்கும் முஸ்லிம்களின் ஆள்புல எல்லையாக இருந்தது. இதனை தமிழர் சமூகமும் நன்கு அறிந்தவர்களாக இருக்கிறார்கள்

பிரதேச செயலகங்கள் பிரிக்கப்பட்ட போது யுத்த சூழலை காரணம் காட்டி கல்முனையின் உப பிரதேச செயலகமாக இயங்கிய இந்தப் பிரதேச செயலகம் பின்னர் கல்முனை தமிழ் பிரதேச செயலகம் என்றும், கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்றும் அவர்களாகவே பெயர்களை மாற்றிக் கொண்டார்களே தவிர, உப பிரதேச செயலகம் என்ற இதன் பெயர் உண்மையில் தரக்குறைவு கிடையாது. இதனை இன்று வடக்குகிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிழையாக விளங்கி முஸ்லிம்களையும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களையும் தூற்றுவது வேதனை தருகிறது.

கல்முனை உப பிரதேச செயலகத்தின் எல்லைக்குள் முஸ்லிம்களின் 90 வீதமான வர்த்தக நிலையங்கள், அரச அலுவலகங்கள், ஆள்புல எல்லைகள், மாநகர சபை, பிரதேச செயலகம், பொலீஸ் நிலையம், கல்முனை பிரதான சந்தைக் கட்டடத் தொகுதி, உட்பட வயல் நிலங்கள் என இங்கு வாழும் முஸ்லிம் மக்களின் வாழ்விடங்கள் இந்த எல்லைக்குள் காணப்படுகின்றன.

இவற்றை பாராளுமன்றத்தில் ஒருவரை ஒருவர் எதிர்த்து பேசுவதன் ஊடாக சாதித்துவிட முடியாது. மாறாக இங்கு வாழும் தமிழ் முஸ்லிம் மக்கள் மிக நீண்ட காலமாக அன்னியொன்னியமாக வாழ்ந்து வருகின்றனர்.

முதலில் நாம் நமக்குள் ஒன்றுபட்டு பேச வேண்டும். ஒரு சரியான எல்லை நிர்ணயம் செய்யப்பட வேண்டும். இதன் ஊடாகத் தான் ஒரு முறையான ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொண்ட தீர்வைப் பெற முடியும். இரண்டு சமூகங்களும் ஒற்றுமையோடு வாழ முடியும் எல்.ரி.ரி. பயங்கரவாதிகளின் தாக்குதல் கல்முனை மாநகரத்தை அழித்த பொழுது அதை எதிர்கொண்டு நின்று மாநகரத்தை பாதுகாத்தவர்கள் முஸ்லிம் சமூகத்தவர்கள் என்பதை அரசாங்கமும் ஆட்சியாளர்களும் நன்கு அறிந்துள்ளார்கள்.

காரைத்தீவில் தமிழ் பிரதேச செயலகத்தின் கீழ் மாளிகைக்காடு, மாவடிப் பள்ளி முஸ்லிம் மக்கள் வாழ்கிறார்கள். அதே போல நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கீழ் 40 வீதமான முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அப்படியானால் கல்முனையில் மட்டும் ஏன் தமிழர்களுக்கு நல்லிணக்கத்துடன் வாழ முடியாது? என்று கேட்கத் தோன்றுகிறது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகம், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை இவைகள் மக்களுக்கான அரச சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் இவற்றை இனரீதியாக கேள்விக்குட்படுத்தும் சாணக்கியன் அவர்களுடைய கருத்து நகைப்புக்குரியது. இந்த நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் இந்த பிராந்தியத்தில் வாழுகின்ற சகல சமூகங்களுக்கும் சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றை நாம் இன்று கண் முன்னே கண்டு கொண்டிருக்கின்றோம்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் சமூகம் சார்ந்த பிரச்சினைகளுக்காக எவ்வாறு ஒன்றிணைந்து கொண்டு குழுவாக நின்று போராடுகிறார்களோ அதே போன்று கல்முனை விவகாரத்தில் ஒரு நிரந்தரமான தெளிவான தீர்வை பெற்றுத் தருவதற்கு முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைமைகள் ஒன்றாக இணைய வேண்டும். என்ற கோரிக்கையையும் நாம் முன்வைக்கின்றோம் என்று தெரிவித்தார். இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட உலமாக்கள் பலரும் கலந்து கொண்டனர்.